அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை :12/2005 (VI)

எனது இல: EST-6/04/INSU/1010
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2016.04.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>2005 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட அரசாங்க அலுவலர்களுக்கான புதிய காப்புறுதி திட்டத்தினை தாபித்தல் ( அக்ரஹாரா)</u>**

2005.05.18 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2005 மற்றும் அதன் திருத்தமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகள் தொடர்பாக தங்களது அவதானத்துக்கு உட்படுத்துகின்றேன்.

02. தற்போது அமுல் படுத்தப்படுகின்ற அவ் ஏற்பாடுகள், பங்களிப்புக்கள் சுய விருப்பினை அடிப்படையாக கொண்ட அக்ரஹாரா உத்தேச வெள்ளித் திட்டம் *(SILVER)* மற்றும் உத்தேச அக்ரஹாரா தங்கத் திட்டம் *(GOLD)* ஆகிய புதிய இரண்டு முன்மொழிவுகளை தொடர்ந்தேச்சையாக விரிவு படுத்துவதற்கும், ஓய்வுபெற்ற அரசாங்க அலுவலர்கள் தொடர்பாக அக்ரஹாரா பாதுகாப்பு என்றழைக்கப்படும் புதிய முன் மொழிவுத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் 2016.03.30 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

03. தற்போது அக்ரஹாரா காப்புறுதியின் நலன்கள் தொடர்பாக பங்களிப்பாளரினால் செலுத்தப்படுகின்ற ரூபா.125/- பங்களிப்புத் தொகைக்குப் பதிலாக, சுயவிருப்பின் அடிப்படையில் ரூபா. 300/- மாதாந்தம் பங்களிப்புச் செய்வதனூடாக உத்தேச வெள்ளித் திட்டத்திலும், ரூபா. 600/-மாதாந்தம் பங்களிப்புச் செய்வதனூடாக உத்தேச தங்கத் திட்டத்திலும் இணைந்து கொள்வதற்கு அரசாங்க அலுவலர்களுக்கு சந்தர்ப்பமளிக்கப்படுகின்றன. வெள்ளி திட்டம் குறித்த நலன்கள் இணைப்பு 01 இன் மூலமும், தங்கத் திட்டம் குறித்த நலன்கள் இணைப்பு 02 இன் மூலமும் தரப்பட்டுள்ளன.

3.1 மேற்படி உயர் பங்களிப்புத் தொகையுடனான நலன் பயக்கும் திட்டம் தொடர்பாக சுயவிருப்பம் தெரிவிக்கப்பட்டதன் பிற்பாடு பங்களிப்பாளர் ஓய்வு பெறும்வரை மீண்டும் அதனை குறைந்த பங்களிப்பு தொகையுடனான நலன் பயக்கும் திட்டத்தின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதற்காக மாற்றப்பட மாட்டாது. தேவையேற்படின், உத்தேச வெள்ளி உத்தேச திட்டத்திற்கு விருப்பத் தெரிவித்த பங்களிப்பாளர் ஒருவர், பின்னர் உத்தேச தங்கத்

திட்டத்திற்கு பங்களிப்பதற்கு தமது சுய விருப்பத்தை மாற்றிக் கொள்வதற்கு மாத்திரம் இடமளிக்கப்படும்.

3.2 தற்போது பொதுவான அக்ரஹாரா காப்புறுதி உத்தேசத் திட்டத்திற்கு பங்களிப்பு நல்குகின்ற அலுவலர்கள் வெள்ளித் திட்டம் அல்லது தங்கத் திட்டம் தொடர்பாக பங்களிப்பதற்கு இங்கு இணைப்பு 03 இன் படி சுயவிருப்பத்தினை திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் தேசிய காப்புறுதி நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3.3 உயர் நலன் பயக்கும் உத்தேச திட்டங்கள் தொடர்பாக விருப்பம் தெரிவிக்கும் போது, தமது முதலாவது தவணை அறவிடப்பட்ட தினத்தில் இருந்து 03 மாதங்கள் முடிவடைதற்குள், அப்போதைய நிதிப் பங்களிப்பு தொகைக்குரியதான உத்தேச திட்டத்தின் நலன்களே உரித்தாகின்றன.

3.4 தமது முதலாவது நியமனத்தில் இருந்தே உத்தேச வெள்ளி திட்டம் அல்லது உத்தேச தங்கத் திட்டம் தொடர்பாக விருப்பத் தெரிவிக்கின்ற அலுவலரது முதலாவது தவணை அறவிடப்பட்ட திகதியில் இருந்தே அத் திட்டங்களுக்குரிய நலன்களுக்கான உரித்துப் பெறுவர்.

04. ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலர்கள் தொடர்பாக ரூபா. 200/- ரூபா மாதாந்த பங்களிப்பின் அடிப்படையல் அறிமுகப்படுத்தப்படுகின்ற “அக்ரஹாரா பாதுகாப்புத் திட்டம்” கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளின் கீழ் இணைப்பு 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள நலன்கள் தொடர்பாக வலுவிலிருக்கும்.

4.1 2016.01.01 ஆந் திகதியில் இருந்து ஓய்வுபெற்ற அனைத்து அரசாங்க அலுவலர்களும், இச் சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும் தினத்தின் பின்னர் ஓய்வு பெறும் அனைத்து அரசாங்க அலுவலர்களும் உத்தேச காப்புறுதி திட்டம் தொடர்பாக கட்டாயமாக பங்களிப்பு செய்ய வேண்டும்.

4.2 சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் அமுல் படுத்தப்படும் திகதி தொடக்கம் பங்களிப்புத் தொகை அறவிடப்படும் என்பதுடன் 2016.01.01 ஆந் திகதி தொடக்கம் சுற்றறிக்கை அமுல் படுத்தப்படும் திகதி வரையிலான காலத்தின் பொருட்டு நிலுவைப் பங்களிப்புத் தொகை அறவிடப்பட மாட்டாது.

4.3 நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரித்து, பங்களிப்பாளரிடமிருந்து பங்களிப்புத் தொகை அறவிடப்பட்ட தினத்தின் பின்னரான நிகழ்வுகள் மற்றும் சந்தர்ப்பங்களின் போது மாத்திரமே நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராவர்.

4.4 ஒரு அலுவலர் 70 வயது வரை நலன்களைப் பெற்றுக் கொள்ள உரித்துடையவராவர்.

4.5 ஓய்வுபெற்ற அரசாங்க அலுவலர்களது பங்களிப்புத் தொகை ஓய்வூதியத் திணைக்களத்தினால் அறவிடப்பட்டு மாதாந்தம் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்திற்கு பணம் அனுப்பப்படும்.

4.6 பங்களிப்பாளரினால் இதற்கான விண்ணப்பத்தினை உண்மையானதெனவும், சரியானதெனவும் பிரதேசத்திலுள்ள கிராம அலுவலரின் ஊடாக உறுதிப்படுத்திக்கொண்டு, தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலர்கள் தொடர்பாக அறிமுகப்படுத்தப்படும் உத்தேச அக்ரஹாரா பாதுகாப்புத் திட்டம் தொடர்பாக குறித்த நிர்வாக ஏற்பாடுகள் உள்ளடங்கிய ஆலோசனை சுற்றறிக்கை ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் காலக்கிரமத்தில் வெளியிடப்படும்.

06. இச் சுற்றறிக்கை ஏற்பாடுகள் 2016.05.01 ஆந் திகதியில் இருந்து அமுல்படுத்தப்படும்.

ஒப்பம்/. ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

**இணைப்பு 01**

**அக்ரஹாரா "வெள்ளி உத்தேசத் திட்டம்"**

**தவணைக் கொடுப்பனவு**

அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியத்திற்கு உரித்துடைய/ பங்களிப்பு ஓய்வூதியத்துக்கு உரித்துடைய பதவி வகிக்கின்ற அனைத்து அலுவலர்களும் இக் காப்புறுதித் திட்டத்திற்கு உள் வாங்கப்படுவதற்கு தகுதி உடையவராவர். ரூபா. 300/- மாதந்த பங்களிப்பைக் கொண்ட இவ் உத்தேசத்திட்டம் அனைத்து அரச அலுவலர்களுக்கும் கட்டாயமானதல்ல.

**உப அட்டணை 01 - சத்திர சிகிச்சை மற்றும் வைத்திய சாலைச் செலவுகள் மீள்ளித்தல் காப்புறுதித் திட்டம்.**

| | நன்மை வகை | எல்லை |
|---|---|---|
| 01 | வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையக் கட்டணங்கள் | ரூபா. 50,000.00<br>(நாள் ஒன்றுக்கு ரூ. 5,000 படி அறைக் கட்டணங்கள்) |
| 02 | மருத்துவ நிபுணர் அதே போல சத்திர சிகிச்சை நிபுணரின் பரிந்துரைகளின் பேரில் விசேட சிகிச்சை தாதிச் சேவை மற்றும் சிகிச்சை நிலைய சிகிச்சை என்பவற்றுக்கான மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை செலவினங்கள். | ரூ. 60,000.00<br>(குடும்ப அலகு ஒன்றுக்காக) |
| 03 | வைத்தியசாலை அல்லது சிகிச்சை நிலையம் ஒன்றில் உள்ளக சிகிச்சையினையினை பெற்றுக் கொள்ளும் போது மருத்துவ ஆலோசனைச் சேவைகளுக்கான அல்லது நிபுணத்துவ வைத்தியர்கள் சேவைகளுக்கான கட்டணங்கள். | ரூ. 35,000.00<br>(குடும்ப அலகு ஒன்றுக்காக) |
| 04 | அதிதீவிர சிகிச்சை, எக்ஸ் கதிர் மற்றும் இரேடியம் சோதனைகள் மற்றும் சிகிச்சை, மின் நோய் மாற்றுகை, இயன்முறை மருத்துவம் உள்ளடங்கலான நிபுணரின் சேவைகளுக்கான கட்டணங்கள் | ரூ. 30,000.00<br>(குடும்ப அலகு ஒன்றுக்காக) |
| 05 | மேலே 01 இலிருந்து 04 வரையான நிலகைளுக்கு உட்பட்ட தனியார் ஆயுர்வேத வைத்தியசாலை யொன்றில் உள்ளக மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக (தனியார் ஆயுர்வேத வைத்தியசாலை சுதேச வைத்தியத்துக்கு பொறுப்பான அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்). | ரூ. 160,000.00<br>(ஆகக்கூடியது) |
| 06 | மேலே 01 முதல் 04 வரையான நிலமைகளில்<br>(அ) ஒரு தனித்த நிலமைக்கான ஆகக் கூடியது<br>(ஆ) ஒரு தனித்த ஆண்டுக்கான ஆகக் கூடியது | <br>ரூ. 160,000.00<br>ரூ. 250,000.00 |
| 07 | இத் திட்டத்தின் உறுப்பினர்களுக்கு மட்டும் இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட கண் நிபுணர் ஒருவரின் பரிந்துரையின் பேரில் மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை மாத்திரம் மூக்குக் கண்ணாடிகள் பெற்றுக் கொள்வதற்காக. | ரூ. 3,500.00 |

| | | |
|---|---|---|
| 08. | I. அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் உள்ளக மருத்துவ சிகிச்சையினையினை பெற்றுக் கொள்வதாயின் உறுப்பினரையும் உள்ளடக்கிய குடும்ப அலகு ஒன்றுக்காக<br><br>II. வைத்திய நிபுணர்களின் பரிந்துரையின் பேரில் கொள்வனவு செய்யப்படும் மருந்து வகைகளுக்காக. (வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதிக்கு மாத்திரம்)<br><br>III. வைத்திய நிபுணர்களின் பரிந்துரையின் பேரில் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகளுக்காக. (வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதிக்கு மாத்திரம்) | ரூ. 10,000.00<br>(நாள் ஒன்றுக்கு ரூ. 1,000 படி )<br><br>ரூ. 60,000.00<br><br>ரூ.30,000.00 |
| 09. | அரசாங்க ஆயுர்வேத வைத்தியசாலையொன்றில், மருத்துவக் கூடம் ஒன்றில் உள்ளக மருத்துவ சிகிச்சையினையினை பெற்றுக் கொள்வதாயின் உறுப்பினரையும் உள்ளடக்கிய குடும்ப அலகு ஒன்றுக்காக | ரூ. 10,000.00<br>நாள் ஒன்றுக்கு ரூபா. 1,000/- படி |
| 10. | அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் மேற்கொள்ளப்படும் சாதாரண குழந்தைப் பேறுக் காப்பு/ இறந்த குழந்தைப் பிறப்புக் காப்பு, கருச்சிதைவு, சிசேரியன் மகப் பேற்றுக்காக வழங்கப்படும் கொடுப்பனவு<br>(ஒரு அனுமதியில் ஆகக்கூடிய 05 நாட்களுக்கு) | ரூ. 1,500.00<br>(நாளொன்றுக்கு) |
| 11. | சாதாரண குழந்தைப் பேறுக் காப்பு<br>(தனியார் வைத்தியசாலையில்) | ரூ. 25,000.00 |
| 12. | தனியார் வைத்தியசாலையொன்றில் மேற்கொள்ளப்படுகின்ற சிசேரியன் சத்திர சிகிச்சைக்காக | ரூ. 60,000.00 |
| 13. | குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டுமான இதயம் தொடர்பான சத்திர சிகிச்சைகளுக்காக | ரூ. 150,000.00 |

**உப அட்டணை 02 - சத்திர சிகிச்சை மற்றும் வைத்திய சாலைச் செலவுகள் மீளளித்தல் காப்புறுதித் திட்டம்.**

| உறுப்பினர்களுக்கு மட்டுமான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தீவிர சத்திர சிகிச்சை செலவுகள் மீளளித்தல் | எல்லை |
|---|---|
| Brain Surgery | ரூ.800,000.00 |
| Kidney Transplant | ரூ.800,000.00 |
| Heart Surgery<br>உறுப்பினருக்கு மட்டும்<br>RF Ablation (உறுப்பினருக்கு மட்டும்) | <br>ரூ.800,000.00<br>ரூ.350,000.00 |
| Cancer Surgical Expenses | ரூ.400,000.00 |
| Knee Replacement | ரூ.150,000.00 |
| Hip Replacement | ரூ.150,000.00 |
| Hearing Aid | ரூ.75,000.00 |

**குடும்ப அலகு :**

*திருமணமான ஊழியர்கள்* :- *உறுப்பினர், வாழ்க்கைத் துணை மற்றும் வேலையில்லாத, திருமணமாகாத மற்றும் தங்கிவாழும் 21 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் அத்துடன் 21 வயதுக்கு மேற்பட்டிருப்பினும் முழுமையாக இயலாத, திருமணமாகாத மற்றும் வேலையில்லாத பிள்ளைகள்.*

*திருமணமாகாத ஊழியர்கள்* :- *உறுப்பினர் மற்றும் 70 வயதுக்குக் கீழ்ப்பட்ட அலுவலரின் பெற்றோர்கள்.*

**உப அட்டணை 03 - தனியாள் விபத்து காப்புறுதித் திட்டம்**

**1.** *தனியாள் விபத்து காப்புறுதித் திட்டம்*

1.1 *தனியாள் விபத்து ஒன்றின் காரணமாக ஏற்படுகின்ற மரணம் ஒன்றின் போது தனியாள் விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் ரூ. 1,000,000.00 வழங்கப்படும்.*

1.2 *தனியாள் விபத்தொன்றின் காரணமாக மட்டும் ஏற்படுகின்ற நிரந்தர முழு இயலாமை நிலமை அல்லது நிரந்தர பகுதிசார் இயலாமையின் போது ரூ. 1,000,000.00 வழங்கப்படும்.*

***நன்மை அட்டவணை***

<table>
<tr><td>01</td><td>இரண்டு கண்களிலும் பார்வை நிரந்தர மற்றும் பூரணமாக இழக்கப்படுதல்</td><td>100%</td><td rowspan="5">விபத்து நிகழ்ந்து 03 மாதங்களிற்குள் ஏற்படும்</td></tr>
<tr><td>02</td><td>வெட்டி அகற்றுதலின் மூலம் இரு கைகளும் அல்லது இரு கால்களும் அல்லது ஒரு கால் மற்றும் ஒரு கை பூரணமாக இழத்தல்</td><td>100%</td></tr>
<tr><td>03</td><td>வெட்டி அகற்றுதலின் மூலம் ஒரு கை அல்லது ஒரு கால் நிரந்தரமாக இழக்கப்படுதலோடு ஒரு கண் பார்வை நிரந்தர மற்றும் பூரணமாக இழக்கப்படுதல்</td><td>100%</td></tr>
<tr><td>04</td><td>ஒரு கண்ணில் பார்வை நிரந்தர மற்றும் பூரணமாக இழக்கப்படுதல்</td><td>50%</td></tr>
<tr><td>05</td><td>வெட்டி அகற்றுதலின் மூலம் ஒரு கால் மற்றும் ஒரு கையை இழத்தல்</td><td>50%</td></tr>
</table>

***கீழ் வரும் சந்தர்ப்பங்களில் இழப்பீடு வழங்கப்பட மாட்டாது***

1. ஒரு தனித்த நிலமையொன்றில் விபத்து ஒன்றின் காரணமாக ஏற்படும் மேலே 01 முதல் 05 வரையான பெறுபேற்றுச்சந்தர்ப்பங்களிலுள் உறுப்பினருக்கு மிகவும் கூடிய நன்மை பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஒன்றுக்காக மட்டும் இழப்பீடு வழங்கப்படும். அவ் நன்மைகளில் சிலதிற்கு உறுப்பினர் முகம் கொடுத்துள்ள நிலையில் நன்மை பெற்றுத்தரும் பெறுபேறு தவிர்ந்த ஏனைய பெறுபேறிற்கு அல்லது பின்னர் ஏற்படுகின்ற நிலமையொன்றினால் ஏற்படுகின்ற பெறுபேறிற்கு மீண்டும் இழப்பீடு வழங்கப்பட மாட்டாது.

2. ***இயற்கை மரண காப்புறுதித் திட்டம்***

இக் காப்பறுதித் திட்டத்தின் மூலம் இயற்கை காரணம் ஒன்றினால் ஏற்படும் மரணம் தொடர்பாக இழப்பீடு வழங்கப்படும்.

(இக் காப்பீடானது காப்புறுதி ஒப்பீட்டுத் திகதி தொடக்கம் 90 நாட்களின் பின் செயறப்படுத்தப்படும்)

2.1 இயற்கை மரணக் காப்பீடு - உறுப்பினருக்கு மட்டும் ரூ. 400,000.00

2.2 வேறு நோய் நிலமையொன்றின் காரணமாக ஏற்படும் நிரந்தர பூரண இயலாமையொன்றின் போதோ நிரந்தர பகுதிசார் இயலாமையொன்றின் போது - ரூ. 100,000.00 (வாழ் நாளில் ஒரு தடவை மாத்திரம்)

**இணைப்பு 02**

**அக்ரஹாரா “தங்க உத்தேசத் திட்டம்”**

**தவணைக் கொடுப்பனவு**

அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியத்திற்கு உரித்துடைய/ பங்களிப்பு ஓய்வூதியத்துக்கு உரித்துடைய பதவி வகிக்கின்ற அனைத்து அலுவலர்களும் இக் காப்புறுதித் திட்டத்திற்கு உள் வாங்கப்படுவதற்கு தகுதி உடையவராவர். ரூபா. 600/- மாதந்த பங்களிப்பைக் கொண்ட இவ் உத்தேசத்திட்டம் அனைத்து அரச அலுவலர்களுக்கும் கட்டாயமானதல்ல.

**உப அட்டணை 01 - சத்திர சிகிச்சை மற்றும் வைத்திய சாலைச் செலவுகள் மீள்ளித்தல் காப்புறுதித் திட்டம்.**

| | நன்மை வகை | எல்லை |
|---|---|---|
| 01 | வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையக் கட்டணங்கள் | ரூ. 80,000.00<br>(நாள் ஒன்றுக்கு ரூ. 8,000 படி அறைக் கட்டணங்கள்) |
| 02 | மருத்துவ நிபுணர் அதேபோல சத்திர சிகிச்சை நிபுணரின் பரிந்துரைகளின் பேரில் விசேட சிகிச்சை தாதிச் சேவை மற்றும் சிகிச்சை நிலைய சிகிச்சை என்பவற்றுக்கான மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை செலவினங்கள் | ரூ. 80,000.00<br>(குடும்ப அலகு ஒன்றுக்காக) |
| 03 | வைத்தியசாலை அல்லது சிகிச்சை நிலையம் ஒன்றில் உள்ளக சிகிச்சையினையினை பெற்றுக் கொள்ளும் போது மருத்துவ ஆலோசனைச் சேவைகளுக்கான அல்லது நிபுணத்துவ வைத்தியர்கள் சேவைகளுக்கான கட்டணங்கள். | ரூ. 50,000.00<br>(குடும்ப அலகு ஒன்றுக்காக) |
| 04 | அதிதீவிர சிகிச்சை, எக்ஸ் கதிர் மற்றும் இரேடியம் சோதனைகள் மற்றும் சிகிச்சை, மின் நோய் மாற்றுகை, இயன்முறை மருத்துவம் உள்ளடங்கலான நிபுணரின் சேவைகளுக்கான கட்டணங்கள் | ரூ. 40,000.00<br>(குடும்ப அலகு ஒன்றுக்காக) |
| 05 | மேலே 01 இலிருந்து 04 வரையான நிலகைளுக்கு உட்பட்ட தனியார் ஆயுர்வேத வைத்தியசாலை யொன்றில் உள்ளக மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக (தனியார் ஆயுர்வேத வைத்தியசாலை சுதேச வைத்தியத்துக்கு பொறுப்பான அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்). | ரூ. 200,000.00<br>(ஆகக்கூடியது) |
| 06 | மேலே 01 முதல் 04 வரையான நிலமைகளில்<br>(அ) ஒரு தனித்த நிலமைக்கான ஆகக்கூடியது<br>(ஆ) ஒரு தனித்த ஆண்டுக்கான ஆகக்கூடியது | <br>ரூ. 200,000.00<br>ரூ. 350,000.00 |

| | | |
|---|---|---|
| 07 | இத் திட்டத்தின் உறுப்பினர்களுக்கு மட்டும் இலங்கை மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்ட கண் நிபுணர் ஒருவரின் பரிந்துரையின் பேரில் மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை மாத்திரம் மூக்குக் கண்ணாடிகள் பெற்றுக்கொள்வதற்காக. | ரூ. 5,000.00 |
| 08. | I. அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் உள்ளக மருத்துவ சிகிச்சையினையினை பெற்றுக் கொள்வதாயின் உறுப்பினரையும் உள்ளடக்கிய குடும்ப அலகு ஒன்றுக்காக<br><br>II.வைத்திய நிபுணர்களின் பரிந்துரையின் பேரில் கொள்வனவு செய்யப்படும் மருந்து வகைகளுக்காக.<br>(வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதிக்கு மாத்திரம்)<br><br>III.வைத்திய நிபுணர்களின் பரிந்துரையின் பேரில் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகளுக்காக.<br>(வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதிக்கு மாத்திரம்) | ரூ. 30,000.00<br>(நாள் ஒன்றுக்கு ரூ. 3,000 படி )<br><br>ரூ. 80,000.00<br><br>ரூ. 40,000.00 |
| 09. | அரசாங்க ஆயுர்வேத வைத்தியசாலையொன்றில், மருத்துவக் கூடம் ஒன்றில் உள்ளக மருத்துவ சிகிச்சையினையினை பெற்றுக் கொள்வதாயின் உறுப்பினரையும் உள்ளடக்கிய குடும்ப அலகு ஒன்றுக்காக | ரூ. 30,000.00<br>நாள் ஒன்றுக்கு ரூபா. 3,000/- படி |
| 10. | அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் மேற்கொள்ளப்படும் சாதாரண குழந்தைப் பேறுக் காப்பு/ இறந்த குழந்தைப் பிறப்புக் காப்பு, கருச்சிதைவு, சிசேரியன் மகப்பேற்றுக்காக வழங்கப்படும் கொடுப்பனவு<br>(ஒரு அனுமதியில் ஆகக்கூடிய 05 நாட்களுக்கு) | நாள் ஒன்றுக்கு ரூபா. 3,000/- படி |
| 11. | சாதாரண குழந்தைப் பேறுக் காப்பு (தனியார் வைத்தியசாலையில்) | ரூ. 50,000.00 |
| 12. | தனியார் வைத்தியசாலையொன்றில் மேற்கொள்ளப்படுகின்ற சிசேரியன் சத்திர சிகிச்சைக்காக | ரூ. 100,000.00 |
| 13. | குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டுமான இதயம் தொடர்பான சத்திர சிகிச்சைகளுக்காக | ரூ. 200,000.00 |

**உப அட்டணை 02 - சத்திர சிகிச்சை மற்றும் வைத்திய சாலைச் செலவுகள் மீளளித்தல் காப்புறுதித் திட்டம்.**

| **உறுப்பினர்களுக்கு மட்டுமான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தீவிர சத்திர சிகிச்சை செலவுகள் மீளளித்தல்** | **எல்லை** |
|---|---|
| Brain Surgery | ரூ. 1,200,000.00 |
| Kidney Transplant | ரூ. 1,200,000.00 |
| Heart Surgery<br>உறுப்பினருக்கு மட்டும்<br>RF Ablation (உறுப்பினருக்கு மட்டும்) | <br>ரூ. 1,000,000.00<br>ரூ. 500,000.00 |
| Cancer Surgical Expenses | ரூ. 600,000.00 |
| Knee Replacement | ரூ. 250,000.00 |
| Hip Replacement | ரூ. 250,000.00 |
| Hearing Aid | ரூ. 100,000.00 |

**குடும்ப அலகு :**

திருமணமான ஊழியர்கள் :- உறுப்பினர், வாழ்க்கைத் துணை மற்றும் வேலையில்லாத, திருமணமாகாத மற்றும் தங்கிவாழும் 21 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் அத்துடன் 21 வயதுக்கு மேற்பட்டிருப்பினும் முழுமையாக இயலாத, திருமணமாகாத மற்றும் வேலையில்லாத பிள்ளைகள்.

திருமணமாகாத ஊழியர்கள் :- உறுப்பினர் மற்றும் 70 வயதுக்குக் கீழ்ப்பட்ட அலுவலரின் பெற்றோர்கள்.

**உப அட்டணை 03 - தனியாள் விபத்து காப்புறுதித் திட்டம்**

**1.** தனியாள் விபத்து காப்புறுதித் திட்டம்

1.1 தனியாள் விபத்து ஒன்றின் காரணமாக ஏற்படுகின்ற மரணம் ஒன்றின் போது தனியாள் விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் ரூ. 2,000,000.00 வழங்கப்படும்.

1.2 தனியாள் விபத்தொன்றின் காரணமாக மட்டும் ஏற்படுகின்ற நிரந்தர முழு இயலாமை நிலமை அல்லது நிரந்தர பகுதிசார் இயலாமையின் போது ரூ. 1,500,000.00 வழங்கப்படும்.

**நன்மை அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| 01 | இரண்டு கண்களிலும் பார்வை நிரந்தர மற்றும் பூரணமாக இழக்கப்படுதல் | 100% | விபத்து நிகழ்ந்து 03 மாதங்களிற்குள் ஏற்படும் |
| 02 | வெட்டி அகற்றுதலின் மூலம் இரு கைகளும் அல்லது இரு கால்களும் அல்லது ஒரு கால் மற்றும் ஒரு கை பூரணமாக இழத்தல் | 100% | |
| 03 | வெட்டி அகற்றுதலின் மூலம் ஒரு கை அல்லது ஒரு கால் நிரந்தரமாக இழக்கப்படுதலோடு ஒரு கண் பார்வை நிரந்தர மற்றும் பூரணமாக இழக்கப்படுதல் | 100% | |
| 04 | ஒரு கண்ணில் பார்வை நிரந்தர மற்றும் பூரணமாக இழக்கப்படுதல் | 50% | |
| 05 | வெட்டி அகற்றுதலின் மூலம் ஒரு கால் மற்றும் ஒரு கையைஇழத்தல் | 50% | |

**கீழ் வரும் சந்தர்ப்பங்களில் இழப்பீடு வழங்கப்பட மாட்டாது**

**1.** ஒரு தனித்த நிலமையொன்றில் விபத்து ஒன்றின் காரணமாக ஏற்படும் மேலே 01 முதல் 05 வரையான பெறுபேற்றுச்சந்தர்ப்பங்களிலுள் உறுப்பினருக்கு மிகவும் கூடிய நன்மை பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஒன்றுக்காக மட்டும் இழப்பீடு வழங்கப்படும். அவ் நன்மைகளில் சிலதிற்கு உறுப்பினர் முகம் கொடுத்துள்ள நிலையில் நன்மை பெற்றுத்தரும் பெறுபேறு தவிர்ந்த ஏனைய பெறுபேறிற்கு அல்லது பின்னர் ஏற்படுகின்ற நிலமையொன்றினால் ஏற்படுகின்ற பெறுபேறிற்கு மீண்டும் இழப்பீடு வழங்கப்பட மாட்டாது.

2. **இயற்கை மரண காப்புறுதித் திட்டம்**

இக் காப்பறுதித் திட்டத்தின் மூலம் இயற்கை காரணம் ஒன்றினால் ஏற்படும் மரணம் தொடர்பாக இழப்பீடு வழங்கப்படும்.
(இக் காப்பீடானது காப்புறுதி ஒப்பீட்டுத் திகதி தொடக்கம் 90 நாட்களின் பின் செயற்படுத்தப்படும்)

2.1 இயற்கை மரணக் காப்பீடு - உறுப்பினருக்கு மட்டும் ரூ. 700,000.00

2.2 வேறு நோய் நிலமையொன்றின் காரணமாக ஏற்படும் நிரந்தர பூரண இயலாமையொன்றின் போதோ நிரந்தர பகுதிசார் இயலாமையொன்றின் போது ரூ. 200,000.00 (வாழ் நாளில் ஒரு தடவை மாத்திரம்)

**இணைப்பு 03**

**<u>அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை :12/2005 (VI) ற்கு அமைய அறிமுகப்படுத்தப்படும் புதிய காப்புறுதித் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரிப் படிவம்</u>**

01. *குடும்பப் பெயருடன் முழுப் பெயர்* :…………………………………..……………………

……………………………………………………………………………………………………...

02. *தனிப்பட்ட முகவரி* *:* …………………………………………………………….……………………………

……………………………………………………………..………………………………

03. *தேசிய அடையாள அட்டை இல* :……………………………………………………

04. *தற்போதைய பதவி* *:* ……………………..……………………………………………

05. *பங்களிப்பாளரின் தொலைபேசி இல :* *கையடக்கம் :* …………… *அலுவலகம் :* ……………

06. *அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபையின் பெயர்* *:* …….………………………………....

……………………………………………………………………………………………………..

07. *அலுவலக முகவரி* *:*…………….………………………………………………………

08. *தற்பொழுது பங்களிப்புச் செய்யும் அக்ரஹாரா காப்புறுதி உத்தேசத் திட்டம் :*

*சாதாரண உத்தேசத் திட்டம்* ☐ *வெள்ளி உத்தேசத் திட்டம்* ☐ *தங்க உத்தேசத் திட்டம்* ☐

09. *பங்களிப்புச் செய்ய விரும்பும் புதிய உத்தேசத் திட்டம்*

*வெள்ளி உத்தேசத் திட்டம்* ☐ *தங்க உத்தேசத் திட்டம்* ☐

………………………… ……………………………

*திகதி* *அலுவலரின் ஒப்பம்*

*நிறுவனத் தலைவரின் பரிந்துரை* *:* *பரிந்துரைக்கிறேன்/ இல்லை.*

*பெயர்* *:*……………………………………………………………

*பதவி* *:*……………………………………………………………

*கையொப்பம்* *:*……………………………………………………… *திகதி* : ……………………………

(*பதவி முத்திரையை இடவும்*)

**இணைப்பு 04**

<u>அக்ரஹாரா பாதுகாப்பு உத்தேசத் திட்டம்</u>

| | நன்மை வகை | எல்லை |
|---|---|---|
| 01 | வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையக் கட்டணங்கள் | ரூ. 30,000.00<br>(நாள் ஒன்றுக்கு ரூ. 3,000 படி அறைக் கட்டணங்கள்) |
| 02 | மருத்துவ நிபுணர் அதேபோல சத்திர சிகிச்சை நிபுணரின் பரிந்துரைகளின் பேரில் விசேட சிகிச்சை தாதிச் சேவை மற்றும் சிகிச்சை நிலைய சிகிச்சை என்பவற்றுக்கான மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை செலவினங்கள் | ரூ. 50,000.00 |
| 03 | வைத்தியசாலை அல்லது சிகிச்சை நிலையம் ஒன்றில் உள்ளக சிகிச்சையினையினை பெற்றுக் கொள்ளும் போது மருத்துவ ஆலோசனைச் சேவைகளுக்கான அல்லது நிபுணத்துவ வைத்தியர்கள் சேவைகளுக்கான கட்டணங்கள். | ரூ. 20,000.00 |
| 04 | அதிதீவிர சிகிச்சை, எக்ஸ் கதிர் மற்றும் இரேடியம் சோதனைகள் மற்றும் சிகிச்சை, மின் நோய் மாற்றுகை, இயன்முறை மருத்துவம் உள்ளடங்கலான நிபுணரின் சேவைகளுக்கான கட்டணங்கள் | ரூ. 20,000.00 |
| 05 | மேலே 01 இலிருந்து 04 வரையான நிலகைளுக்கு உட்பட்ட தனியார் ஆயுர்வேத வைத்தியசாலை யொன்றில் உள்ளக மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக (தனியார் ஆயுர்வேத வைத்தியசாலை சுதேச வைத்தியத்துக்கு பொறுப்பான அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்). | ரூ. 120,000.00<br>(ஆகக்கூடியது) |
| 06 | மேலே 01 முதல் 04 வரையான நிலமைகளில்<br>(அ) ஒரு தனித்த நிலமைக்கான ஆகக்கூடியது<br>(ஆ) ஒரு தனித்த ஆண்டுக்கான ஆகக்கூடியது | <br>ரூ. 120,000.00<br>ரூ. 150,000.00 |
| 07 | I. அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் உள்ளக மருத்துவ சிகிச்சையினையினை பெற்றுக் கொள்வதாயின்<br>II. வைத்திய நிபுணர்களின் பரிந்துரையின் பேரில் கொள்வனவு செய்யப்படும் மருந்து வகைகளுக்காக.(வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதிக்கு மாத்திரம்)<br>III. வைத்திய நிபுணர்களின் பரிந்துரையின் பேரில் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகளுக்காக.(வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதிக்கு மாத்திரம்) | ரூ. 5,000.00<br>(நாள் ஒன்றுக்கு ரூ. 500 படி)<br>ரூ. 50,000.00<br>ரூ. 20,000.00 |

| | | |
|---|---|---|
| 08. | அரசாங்க ஆயுர்வேத வைத்தியசாலையொன்றில், மருத்துவக் கூடம் ஒன்றில் உள்ளக மருத்துவ சிகிச்சையினையினை பெற்றுக் கொள்வதாயின் | ரூ. 5,000.00<br><br>நாள் ஒன்றுக்கு ரூபா. 500/- படி |
| 09. | பின்வரும் இருதய சத்திர சிகிச்சைச் செலவினங்களினை (ஆகக்கூடியது)<br>1. Heart Attack – (Myocardial Refraction)<br>2. Coronary Artery Disease (Coronary by- pass Surgery)<br>3. Stroke (Cerebra Vascular accident)<br>4. Double (Mitral & Aortic) Valve Replacement<br>5. Atrial Septal Defect<br>6. Percutancous Transluminal Coronary Angioplast (PTC)<br>7. Fallot Tetrology<br>8. Bruganda Syndrome<br>9. Implanting Pacemaker – Single<br>10. Implanting Pacemaker – Double<br>11. Mitral Valve Replacement<br>II. RF Ablation (ஆகக்கூடியது)<br>III. (அ) பின்வரும் சத்திர சிகிச்சைகளுக்காக (ஆகக்கூடியது)<br>1. Cancer<br>2. Kidney Transplant<br>(ஆ) பின்வரும் சத்திர சிகிச்சைகளுக்காக,<br>3. Reanal Failure<br>4. Major Organ Transplant, such as lung or bone marrow. However, this benefit will not be paid to a donor of a major organ.<br>5. Paralysis<br>6. Multiple Sclerosis<br>7. Primary pulmonary Arterial Hypertension<br>8. Fulminant Hepatitis | ரூ. 500,000.00<br><br>ரூ. 225,000.00<br><br>ரூ. 200,000.00<br><br>ரூ. 150,000.00 |
| 10 | கேட்டல் உபகரணங்கள் | ரூ. 50,000.00 |
| 11. | இயற்கை மரணமொன்றின் போது<br>விபத்தினால் ஏற்படும் மரணமொன்றின் போது | ரூ. 150,000.00<br>ரூ. 600,000.00 |